# <u>IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT MUNSIF, ATTUR</u>

## O.S.No. 351/2002

Deposition of **<u>P.W. -4</u>** witnesses for Plaintiff/Defendant Solemnly affirmed by Tmt. K. Janaki, Gr. III Bench Clerk of this court on 16.11.2024 in accordance with the provisions of Act 1 of 1873.

| | | | |
|---|---|---|---|
| Name | : வெங்கடேசன் | Father's Name | : அருணாச்சலம் |
| Village | : பட்டுத்துறை | Taluk | : தலைவாசல் |
| Calling | : V.A.O | Age | : 38 |

துவக்க நேரம் : 11.44 A.M

<u>மனுவின் பேரில் சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>:

1. தாவா சொத்தை பார்வையிட்டு களப்பணி செய்து விசாரித்து சாட்சியமளிக்க எனக்கு அழைப்பாணை வந்தது என்றால் சரிதான். தற்பொழுது வந்துள்ள அழைப்பாணையில் அவ்வாறு சொல்லப்பட்டிருந்தாலும் நான் வேறு வட்டத்திற்கு பணி மாறுதல் ஆனதால் தாவா சொத்தில் களப்பணி செய்ய எனக்கு அதிகாரமில்லை.

2. தாசில்தாரின் அனுமதி பெற்று நான் தாவா சொத்தை களப்பணி செய்ய கடமைப்பட்டுள்ளேன் என்றால் சரியல்ல, வட்டாட்சியர் அந்த வட்டத்திற்குள் இருக்கும் கிராம நிர்வாக அலுவலருக்குதான் அதிகாரம் வழங்க முடியும். வேறு வட்டத்தில் உள்ள கிராம நிர்வாக

அலுவலருக்கு உத்தரவிட முடியாது. நீதிமன்ற உத்தரவிற்கிணங்க நான் தலைவாசல் வட்டாட்சியர் அனுமதி பெற்று நான் களப்பணி செய் ய முடியும் என்றால் நீதிமன்றம் உத்தரவிட்டால் நான் களப்பணி சாட்சியம் அளிக்க தயாராக உள்ளேன்.

3. நீதிமன்ற உத்தரவின்படி சாட்சி களப்பணி செய்ய எவ்வித நடவடிக்கை மேற்கொள்ளவில்லை, சாட்சி வேறு வட்டத்தில் பணியில் இருந்தாலும்கூட தாவா சொத்தை களப்பணி செய்ய எவ்வித வேண்டுகோள் கடிதத்தையும் தலைவாசல் வட்டாட்சியருக்கு கொடுக்கவில்லை என்பது தெரிய வருகிறது. எனவே நீதிமன்ற உத்தரவுப்படி வேண்டுகோள் கடிதத்தை முன்னிலைப்படுத்திவிட்டு அதன் பின்னிட்டு சாட்சியம் அளிக்க சாட்சிக்கு இதன் மூலம் உத்தவிடப்படுகிறது. எனவே குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.

முடிவு நேரம்: 11.52 A.M.

Taken down before / by me in open court and read over / interpreted to the witness and acknowledged by him / to be correct

sd/- S.Munusamy
Principal Distrit Munsif, Attur

Typed by Tmt. L.Kalaiselvi - O.S. No. 351/2002, Dt. 16.11.2024.